

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | ஏப்ரல் 20, 2017 | புரட்சி 16 | முழக்கம் 14 | விலை: ரூ.3.00

# ஃபாரூக் நினைவேந்தல்: உணர்ச்சிப் பெருக்குடன் திரண்ட தோழர்கள்





மத அடிப்படைவாதிகளால் இறை மறுப்பாளர் என்பதற்காக மார்ச் 16 அன்று இரவு கொடூரமாக கொலை செய்யப்பட்டார் கோவை திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் ஃபாரூக். ஃபாரூக் படத்திறப்பு - நினைவேந்தல் நிகழ்வு 16.4.2017 ஞாயிறு மாலை 5 மணியளவில் கோவை அண்ணாமலை அரங்கில் உணர்வுபூர்வமாக நடந்தது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து கழகத் தோழர்களும், பல்வேறு இயக்கங்களின் தோழர்களும் திரண்டிருந்தனர். 4.30 மணியளவில் அரங்கம் முழுதும் நிரம்பிய நிலையில் பலரும் நின்றுகொண்டே கருத்துகளைக் கேட்டனர். நிகழ்வுகள் தொடங்குவதற்கு முன் செய்தியாளர்களுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேட்டி அளித்தார். பேட்டியில் -

“இந்த வழக்கை சி.பி.சி.அய்.டி. விசாரணைக்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து, நாங்கள் போராடினோம். இப்போது அந்தக் கோரிக்கையை காவல் துறை ஏற்று காவல்துறை இயக்குனர் ‘சி.பி.சி.ஐ.டி.’ விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டுள்ளார். இதை வரவேற்கிறோம். அதே நேரத்தில் இந்த வழக்கின் பின்னணி - இந்தக் கொலைக்கு எங்கே திட்டமிடப்பட்டது ? யார் நிதி வழங்கினார்கள் ? இதற்குப் பின்னாலிருந்து தூண்டி விட்ட அமைப்புகள் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட்டு, அவர்களும் கைது செய்யப்பட்டு வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். அப்போதுதான் சி.பி.சி.அய்.டி. விசாரணைக்கு மாற்றப்பட்டதன் நோக்கத்துக்கு அர்த்தமிருக்க முடியும்” என்று கூறினார்.

தொடர்ந்து கோவை மாவட்ட கழகத் தலைவர் நேருதாசு தொடக்க உரையாற்றி, நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். புரட்சிகர இளைஞர் முன்னணி தோழர் கண்மணி, ‘இப்படிக்கு பாரூக்’ என்ற தலைப்பில் கவிதை வாசித்தார். தோழர் கொளத்தூர் மணி, ஃபாரூக் படத்தை திறந்து வைத்தார். எஸ்ஸன்ஸ் கிளப் (Essense Club) எனும் கேரள நாத்திகர் சங்கத்தின் தலைவர் சஜீவன் அந்திக்காடு நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியதோடு தங்களது அமைப்பு சார்பில் ஃபாரூக் குடும்ப நிதியாக 4 இலட்சத்து 4ஆயிரம் ரூபாயை பாரூக் தந்தை ஹமீது மற்றும் பாரூக் குழந்தைகளிடம் வழங்கினார். தொடர்ந்து கீழ்க்கண்ட அமைப்புகளைச் சார்ந்த தோழர்கள் மத அடிப்படை வாதத்துக்கு எதிராகவும், பாரூக் கொலையைக் கண்டித்தும் உரையாற்றினர்.

யு.கே. சிவஞானம் (தமிழ் மாநில தீண்டாமை ஒழிப்பு முன்னணி), வழக்குரைஞர் அலாவுதீன் (நாத்திக பண்பாட்டுக் கழகம்), பார்த்திபன் (ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம்), பெரோஸ் பாபு (புரட்சிகர இளைஞர் கழகம்), மலரவன் (புரட்சிகர இளைஞர் முன்னணி), இளவேனில் (தமிழ்ப் புலிகள்), சே.மெ. மதிவதனி (மாநில மாணவரணி கூட்டுச் செயலாளர், திராவிடர் கழகம்), மு. கார்க்கி (தலைவர், சமத்துவக் கழகம்), மருத்துவர் மாணிக்கம் (விடுதலை சிறுத்தைகள் கட்சி), வழக்குரைஞர் ச.பாலமுருகன் (பி.யூ.சி.எல்.), யு. கலாநாதன் (இந்திய பகுத்தறிவாளர்கள் கூட்டமைப்பின் புரவலர்), எழுத்தாளர் பாமரன், சுசி. கலையரசன் (விசிக), ஆறுச்சாமி (ஆட்சிக் குழு உறுப்பினர் த.பெ.தி.க.), ப.பா.மோகன் (வழக்குரைஞர்), விடுதலை இராசேந்திரன் (பொதுச் செயலாளர், திவிக.) ஆகியோர் உரையாற்றினர். பாரூக் குடும்பத்துக்கு நிதி வழங்கி நினைவேந்தல் உரையை கொளத்தூர் மணி நிகழ்த்தினார்.

பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தனது உரையில், “தோழர் பாரூக் இறை மறுப்பாளர் - மத மறுப்பாளர் என்ற இலட்சியத்தில் உறுதியாக இருந்தார் என்பதற்காகவே கொலை செய்யப்பட்டிருக்கிறார். இலட்சியத்துக்காக உயிர்ப் பலியான வரலாற்றுப் பெருமை அவருக்குக் கிடைத்திருக்கிறது. பகத்சிங் தூக்கிலிடப்பட்ட போது பெரியார் இப்படி ஒரு பெருமைக்குரிய மரணம் தனக்கு கிடைக்கவில்லையே என்று எழுதினார். இஸ்லாமியர்கள், பார்ப்பனிய இந்துமத சமூக அமைப்புக்குள் பலி கடாவாக்கப்பட்ட மக்கள் என்ற பார்வையோடு அந்த மக்களின் உரிமைகளுக்கும் அவர்கள் மீது இந்துத்துவ பார்ப்பனியம் திணிக்கும் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் நாம் செயல்பட்டு வருகிறோம். சமூகப் பார்வையில் இஸ்லாமியர்களோடு நமது நட்பு தொடருகிறது. அதை இஸ்லாமிய மதத்துக்கான ஆதரவாக கருதிட முடியாது. பெரியாரிஸ்டுகள் - மத மறுப்பாளர்கள். அதே நேரத்தில் இஸ்லாமிய மக்களிடம் நமக்குள்ள உறவு குலைந்துவிடக் கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். எங்களுடைய அமைப்பின் தோழர்களும் அதே உணர்வுடனேயே செயல்படுகிறார்கள். ஆனால், இஸ்லாமியர்களுக்கும் திராவிடர் இயக்கத்துக்குமான உறவை சீர்குலைக்கும் நோக்கத்தோடு செயல்படும். ஒரு சில இஸ்லாமிய தலைவர்களின் செயல்பாடுகள், தமிழ்நாட்டில் நீண்டகாலமாக பேணப்பட்டு வரும் நல்லுறவை குலைத்துவிடக்கூடாது. அத்தகைய தலைவர்களை இஸ்லாமிய சமூகத்திலிருந்து வேறுபடுத்தியே நாங்கள் பார்க்கிறோம். இந்த மதத் தீவிரவாதங்களுக்கு தமிழக இஸ்லாமிய மக்கள் இடம் தந்துவிடக் கூடாது” என்று குறிப்பிட்டார்.

பரப்புரை செயலாளர் பால் பிரபாகரன் பேசுகையில்: “சில இஸ்லாமிய தலைவர்கள் எங்களை வாதத்துக்கு அழைக்கிறார்கள். தலைவரோ பொதுச் செயலாளரோ வரவேண்டாம். நானே வாதத்துக்கு தயார்” என்றார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசுகையில், “பெரியார் அவரது காலத்திலேயே நபிகள் விழாவில் இசுலாமியர்களிடையே பேசும்போதுகூட இஸ்லாம் குறித்த தனது விமர்சனங்களை சுட்டிக்காட்டி அவர்களுக்கான ஆதரவை வழங்கிப் பேசியிருக்கிறார். இஸ்லாமிய மக்களின் உரிமைகளுக்காக நாங்கள் எப்போதும் களத்தில் நிற்போம். அதே நேரத்தில் அந்த சமூகத்திலிருந்து சில தலைவர்கள் தொடர்ந்து ஆணவமாகப் பேசி, பெரியார் இயக்கத்தை விவாதத்துக்கு அழைத்துக் கொண்டே இருக்கிறார்கள். பெரியார் இயக்கத்துக்கு சவால் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து இப்படி சில ஆணவ இஸ்லாமிய தலைவர்கள் சீண்டிக் கொண்டே இருப்பதால், இப்போது நாங்கள் அதை சந்திக்க முடிவுக்கு வந்துவிட்டோம். நேருக்கு நேர் வேண்டாம்; முகநூல்கள் வழியாக உங்கள் வாதங்களை வைத்துக் கொள்ளலாம். நாங்கள் அந்த வாதங்களுக்கு பதில் தரத் தயாராக இருக்கிறோம்” என்று அறிவித்தார்.

தொடர்ந்து பேசுகையில், “ஃபாரூக் குடும்பத்துக்கு நிதி திரட்ட நாங்கள் முடிவு செய்தபோது, முகநூல் வழியாக அறிவித்தோம். இதற்காக நிதி கேட்டு இயக்கம் ஏதும் நடத்தவில்லை; நிதி தாருங்கள் என்று எவரிடமும் கேட்கவும் இல்லை. முகநூல் அறிவிப்பைப் பார்த்து அதில் தரப்பட்ட எங்கள் கழகப் பொருளாளர் துரைசாமி அவர்களின் வங்கிக் கணக்கில் தோழர்கள் தாங்களாகவே முன் வந்து நிதி அனுப்பினார்கள். இந்த நிகழ்விலும் தாங்களாகவே முன் வந்து நிதி வழங்கினார்கள். இப்படி திரட்டிய தொகை 10 இலட்சத்தை எட்டியிருக்கிறது என்று பலத்த கரவொலிக்கிடையே அறிவித்தார். பாரூக்கின் தந்தை ஹமீது மற்றும் பாரூக் குழந்தைகளிடம் மேடையில் அதற்கான காசோலைகளை வழங்கினார்.



கேரள பகுத்தறிவாளர்கள் ரூ.4,04,000/-, அது தவிர கழக சார்பில் திரட்டப்பட்ட ரூ.10,00,000/- நிதியும் ஃபாரூக் குடும்பத்தாரிடம் மேடையில் வழங்கப்பட்டது.

தலையங்கம்

# ஆபத்து – எச்சரிக்கை!

இந்தியாவை ஒற்றை ஆட்சியின் கீழ் கொண்டு வருவதற்கும், இந்துத்துவ சர்வாதிகாரத்தை 'ஜனநாயக' வழிமுறைகள் வழியாக திணிப்பதற்குமான ஆபத்தான திட்டங்களை நடுவண் பா.ஜ.க. ஆட்சி மேற்கொள்ளத் தொடங்கிவிட்டது. இதற்கு எத்தனையோ சான்றுகளை அடுக்கடுக்காக காட்ட முடியும்.

மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கையில் நீட் தேர்வை நுழைத்து, தமிழகத்தின் தனித்துவத்தைப் பறித்து விட்டார்கள். பொறியியல் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கைக்கும் இது வரப் போகிறது. பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்துக்கு சட்ட அங்கீகாரம் தரும் சட்டத்தை இயற்றிய போது அதை நாமும் வரவேற்றோம். அதன் வழியாக பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் ஒரு ஜாதியை இணைப்பது அல்லது நீக்குவது எனும் உரிமையை மாநில அரசிடமிருந்து பறித்து விட்டார்கள். குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்றி பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் மாநில அரசு திருத்தங்களை செய்ய முடியாது.

காவிரி நீர் உரிமைக்காக நடுவர் மன்றம் பரிந்துரைத்த காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரியும், நடுவர் மன்றம் நிர்ணயித்த 192 டி.எம்.சி. தண்ணீரை கருநாடகம் திறந்துவிடக் கோரியும் தமிழர்களாகிய நாம் போராடி வருகிறோம். இனி நடுவர் மன்றத் தீர்ப்பே செல்லுபடியாகுமா என்ற கேள்விக் குறி எழுந்து நிற்கிறது. நடுவண் ஆட்சி 'நதிநீர் தீர்ப்பாயம்' ஒன்றை உருவாக்கப் போவதாக அறிவித்திருக்கிறது. மாநிலங்களின் நதி நீர் உரிமைகள் பறிபோகும் ஆபத்துகள் எழுந்துள்ளன.

'பசுவதைத் தடைச் சட்டம்' ஒன்றை நடுவண் அரசே இயற்றி, அனைத்து மாநிலங்களிலும் பயன்படாத பசு மாட்டைக்கூட வெட்ட தடை செய்ய வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் வற்புறுத்தி வருகிறார். இதற்கான சட்டம் இயற்றும் உரிமை மாநில ஆட்சி களுக்குத்தான் உண்டு. இதையும் பறித்து விடுவதற்கு சங் பரிவாரங்கள் வற்புறுத்துகின்றன.

மாநிலங்களவையில் பா.ஜ.க. வுக்கு போதுமான எண்ணிக்கை பலம் இல்லை என்பதால் மாநிலங் களவையையே புறக்கணிக்கும் செயல்பாடுகளை மோடி ஆட்சி தொடங்கியிருக்கிறது. கடந்த பிப்ரவரி மாதம் நாடாளுமன்றத்தில் நிதியமைச்சர் அருண் ஜெட்லி தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கைக்கு நாடாளுமன்றத்தில் ஏற்பு வாங்கப்பட்டபோது, கடைசி நேரத்தில் 40 திருத்தங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றி விட்டார்கள். இந்த திருத்தங்களை மாநிலங்களவைக்கே கொண்டு செல்லவில்லை. நிதி தொடர்பான மசோதாக்களுக்கு நாடாளுமன்றத் தின் ஒப்புதல் மட்டுமே போதுமானது என்ற சட்டம் தந்துள்ள வாய்ப்பை இப்படி குறுக்கு வழியில் முறை கேடாகப் பயன்படுத்தியிருக்கிறது மோடி ஆட்சி.

இந்த திருத்தங்களில் ஒன்று – வருமான வரித் துறை அதிகாரி களுக்கு வழங்கப்படும் எல்லை மீறிய அதிகாரங்களாகும். நடுவண் ஆட்சி, அரசியல் எதிரிகளை ஒழிப்பதற்குப் பயன்படுத்தும் வலிமையான அதிகார அமைப்புகளில் ஒன்று வருமான வரித் துறை. புதிய திருத்தத்தின்படி, இனி வருமான வரித் துறை அதிகாரிகள், தேவையான ஆதாரங்கள், தடயங்கள் இல்லாமல், சந்தேகத்தின் அடிப்படையிலேயே சோதனையிடவும், சொத்துகளை பறிமுதல் செய்யவும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. சோதனையிடப்படுவதற்கான காரணங்களை மேல்முறையீட்டு தீர்ப்பாயம் உள்ளிட்ட எந்த அமைப்புக்கும் அதிகாரிகள் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. பார்ப்பன அதிகார மய்யமாக திகழும் வருமான வரித் துறையை 'ஒரு இராணுவ சர்வாதிகாரி'போல செயல்படுவதற்கான அதிகார அமைப்பாக்கிவிட்டார்கள்.

மோடி குஜராத் முதல்வராக இருந்தபோது 'சகாரா', 'ஆதித்யா பிர்லா' குடும்பங்களில் வருமான வரித்துறை நடத்திய சோதனைகளில் மோடிக்கு நன்கொடை தந்ததற்கான ஆவணங்கள் கைப்பற்றப்பட்டு, அந்த ஆதாரங்கள் வருமான வரித்துறையின் பதிவேடுகளிலேயே இடம் பெற்றிருந்ததை சுட்டிக்காட்டி நடவடிக்கைக் கோரி உச்சநீதிமன்ற வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் ஆதாரங்களோடு கடந்த அக்டோபரில் வழக்கு தொடர்ந்தார். மோடி மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்ததற்காகவே, வருமான வரித் துறை அதிகாரியாக இருந்த கே.பி. சவுத்திரி என்பவருக்கு, இலஞ்ச ஒழிப்புத் துறைத் தலைவர் என்ற உயர்ந்த பதவி பரிசாக அளிக்கப்பட்டதையும் பிரசாந்த் பூஷன் சுட்டிக் காட்டியிருந்தார். இத்தகைய 'நேர்மை'யான வருமானவரித் துறை, இப்போது 'சர்வ சக்தியுடன்' தனது 'தர்பாரை' நடத்த மோடியின் அரண்மனைக் கதவுகள் திறந்துவிடப்பட்டிருக்கின்றன.

மற்றொரு முக்கிய திருத்தமும் வந்திருக்கிறது. கார்ப்பரேட் கம்பெனிகள் இனி அரசியல் கட்சிகளுக்கு நன்கொடைகளை வழங்குவதற்கு உச்சவரம்பு எதுவும் கிடையாது என்பதே இந்த புதிய திருத்தம். தற்போதுள்ள சட்டத்தின்படி ஒரு கார்ப்பரேட் நிறுவனம் தனது நிகர இலாபத்தில் 7.5 சதவீத அளவில் மட்டுமே அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை வழங்க முடியும். அது மட்டுமின்றி வழங்கப்பட்ட தொகை, வழங்கிய கட்சிகளின் பெயர்களையும் அறிவித்தாக வேண்டும். இப்போது வரம்பு நீக்கப்பட்டதோடு வழங்கிய கட்சிகளின் பெயர்களையும் வெளியிடத் தேவை இல்லை என்கிறது புதிய திருத்தம். ஏற்கெனவே அரசியல் கட்சிகள் கார்ப்பரேட் நிறுவனங்களின் பிடிக்குள் வந்துவிட்டன. கார்ப்பரேட் நிறுவனங்களோ பார்ப்பன அதிகார வர்க்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன. அதை மேலும் உறுதிப்படுத்தியிருக்கிறது மோடி ஆட்சி. தமிழ் நாட்டில் ஆர்.கே. நகர் தொகுதியில் கோடி கோடியாக பணம் புரண்டதற்கான காரணங்களில் ஒன்று, கார்ப்பரேட் கம்பெனிகளிடமிருந்து பெற்ற இலஞ்சம். இந்த இலஞ்சத்துக்கு கதவு திறந்து விடும் பா.ஜ.க.வுக்கு அரசியல் ஊழல்களைப் பற்றிப் பேச என்ன தார்மீக உரிமை இருக்கிறது என்று கேட்கிறோம்.

மற்றொரு திருத்தம் – தீர்ப்பாயங்களை முடக்கியிருப்பதாகும். இந்தத் தீர்ப்பாயங்கள் நீதித் துறைக்குரிய அதிகாரங்களுடன் செயல்படக்கூடிய அமைப்புகள். அரசின் தலையீடுகளுக்கு இதில் இடமில்லை. நீதிமன்ற ஆணைப்படி உருவாக்கப்பட்ட தீர்ப்பாயங் களும் உண்டு. தீர்ப்பாயங்களுக்கு தலைவர்கள், உறுப்பினர்கள், அரசு நிர்வாக அமைப்பு களுக்கு அப்பாற்பட்டவர்கள் என்று உச்சநீதிமன்றம் 2014இல் திட்டவட்டமாக கூறியிருக்கிறது. ஆட்சியாளர்களையே சம்மன் செய்து விசாரிக்கும் உரிமை கொண்டவை. இப்போது தேவையில்லை என்று ஆட்சியாளர் விரும்புகிற தீர்ப்பாயங்களை கலைக்கவும், சில தீர்ப்பாயங்களின் தனித்துவமான உரிமைகளைப் பறித்து, வேறு சிலவற்றுடன் இணைக்கவும் சட்டத்தைத் திருத்தியிருக்கிறார்கள்.

வரி, அரசு வாங்கும் கடன், அரசு செலவினங்கள், கடன் பத்திரங்கள் போன்ற அம்சங்கள் மட்டுமே நிதி மசோதாவின் கீழ் வரக்கூடியவை. மோடி ஆட்சி, வருமான வரித் துறை, கார்ப்பரேட் கம்பெனிகள் சட்டம், தீர்ப்பாயங்கள் போன்றவற்றையும் நிதி மசோதாவுடன் இணைத்து மாநிலங்களவை விவாதத்துக்கு உட்படுத்தாமல் 40 திருத்தங்களை செய்திருப்பது மிகப் பெரும் ஜனநாயகப் படுகொலை.

மாநிலங்களின் உரிமைகளை பறிப்பது மட்டுமின்றி, மாநிலங்களின் அவையையும் முடக்கி விட்டார்கள். ஒற்றை ஆட்சி ஒற்றை கலாச்சாரம் எனும் இந்துத்துவா ஆயுதத்தை மக்களுக்கு எதிராக கூர் தீட்டி வருகிறது மோடி ஆட்சி.

விழித்துக் கொண்டு போராடாது விட்டால், 'இராமராஜ்யம்' என்ற பார்ப்பன சர்வாதிகாரத்தை சந்திக்க வேண்டியிருக்கும். இதற்கான எதிர்ப்புக் களமாக தமிழ்நாடு மட்டுமே மிஞ்சியிருக்கிறது; மறந்துவிடக் கூடாது.

## 'பாரூக் படுகொலையும் காலத்தின் தேவையும்': சென்னையில் கருத்தரங்கம்



4.4.2017 திங்கட்கிழமை மாலை 6.00 மணியளவில் சென்னை, கவிக்கோ மன்றத்தில், துவக்கு இலக்கிய அமைப்பின் ஒருங்கிணைப்பில், "தோழர் பாரூக் படுகொலை கண்டனமும் காலத்தின் தேவையும்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

நிகழ்வுக்கு வந்திருந்த அனைவரும் வரவேற்று துவக்கு இலக்கிய அமைப்பின் பொறுப்பாளர் கவிஞர் இசாக் உரையாற்றி, நிகழ்வினை நெறிப்படுத்தினார்.

திராவிட இயக்கத் தமிழர்ப் பேரவையின் முத்தையா குமரன், விடுதலை சிறுத்தை கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் ஆளூர் ஷாநவாஸ், மனிதநேய ஜனநாயகக் கட்சி மாவட்ட செயலாளர் தமீம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் முதன்மைத் துணைத் தலைவர் அப்துல் ரகுமான் ஆகியோரைத் தொடர்ந்து மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லா உரையாற்றினார்.

அவரது உரையில் பெரியார் இயக்கத்துக்கும், முஸ்லிம் அமைப்புகளுக்கும் நிலவும் நல்லுறவு பெரியார் காலம் முதல் இன்றுவரை தொடர்ந்துவரும் பாங்கினையும், சிறுபான்மை மக்கள்மீது எங்கிருந்து தாக்குதல் வந்தாலும் முதலில் களத்துக்கு வருபவர்கள் திராவிடர் கழகங்களைச் சார்ந்தோரே என்றும், இஸ்லாமிய சமுதாயத்தில் பிறந்த ஏராளமானோர் நாத்திகர் களாகவும், நாத்திக பரப்புரையாளர்களாகவும் விளங்கியதை பெயர்கள் குறிப்பிட்டு எடுத்துரைத்தார். எவர் ஒருவருக்கும் அவரது கொள்கையைப் பேசவும் பரப்பவும் உள்ள உரிமையைத் தடுக்க முடியாது என்றும், எவர் ஒருவரும் மற்றொருவர் பின்பற்றும் கொள்கைக்காக கொலை செய்யும் வெறிச்செயலை ஏற்றுக் கொள்ளமுடியாது என்றும் அழுத்தமாகக் குறிப்பிட்டார்.

இறுதியாகக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசும்போது இஸ்லாமிய சமுதாயத்தில் பிறந்து நாத்திகக் கொள்கையை ஏற்று பரப்புவர்களைப் பற்றிய அனைத்து இஸ்லாமிய இயக்கங்களும் வெளிப்படையாய் தங்கள் நிலைப்பாட்டை அறிவிக்கவேண்டும் என்று கேட்க இருந்ததாகவும், பேராசிரியர் ஜவாஹிருல்லா உரை, அக்கேள்வியை எழுப்ப வேண்டியத் தேவையில்லாமல் செய்துவிட்டது என்றும், மேலும் சென்னை போன்ற இடங்களில் இக்கருத்துகளைப் பேசுவதைவிட கோவை நகரில் ஒரு கூட்டத்தை நீங்கள் ஏற்பாடு செய்து அதில் உரைப்பது கூடுதல் பயனுள்ளதாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

கழகத் தலைவர் உரையாற்றி அமர்ந்ததும், ஒலி பெருக்கிக்கு முன்வந்த தோழர் ஆளூர் ஷா நவாஸ், ஓர் அறிவிப்பை வெளியிட்டார். நிகழ்வுக்கு வந்துள்ள முஸ்லிம் இயக்கங்களின் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் அப்பல்லோ அனீஃபா, கூட்டமைப்பின் சார்பில், அனைத்து இயக்கங்களையும் ஒருங்கிணைத்து கோவையில் ஒரு கூட்டத்தை விரைவில் நடத்த உள்ளதாக உற்சாக கையொலிக்கிடையில் அறிவித்தார்.

இறுதியாக பேராசிரியர் ஹாஜாகனி தனது குடும்பத்தில் அவரது பெரியப்பா திராவிடர் கழக இயக்கத்தில் தீவிரமாக இயங்கிய செய்தியைக் கூறி நன்றியுரையாற்றி நிகழ்வினை நிறைவு செய்தார்.

## அம்பேத்கர் சிலைகளுக்கு மாலை

ஆத்தூரில் அம்பேத்கர் 126 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் திராவிடர் விடுதலை கழகம் சார்பில் மகேந்திரன் மற்றும் கழகத் தோழர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பெரியார்–அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாலை 4.00 மணியளவில் பெரியார் – அம்பேத்கர் வாசகர் வட்டம் புதியதாக தொடங்கப் பட்டது. படிப்பகத்தை (வாசகர் வட்டம்) பெரியாரின் தொண்டர், பேராசிரியர் முருகேசன், பேராசிரியர் அம்பேத்கர் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு படிப்பகத்தை திறந்து வைத்தனர். அண்ணலின் பிறந்த நாளை சிறப்பிக்கும்படி அனைத்து தோழர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் பொங்கல் இனிப்பு வழங்கப்பட்டது.

**சென்னையில் :** சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக ஏப்ரல் 14, அம்பேத்கர் பிறந்த நாள் விழா காலை 8 மணியளவில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் அடையாறு அம்பேத்கர் மணி மண்டபத்தில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து அங்கிருந்து வாகனப் பேரணி யாக மயிலாப்பூர் அம்பேத்கர் சிலைக்கும் இராயப் பேட்டை பத்ரி நாராயணன் நூலகத்திலுள்ள அம்பேத்கர் உருவ படத்திற்கும் மாலை அணிவிக்கப் பட்டது. மயிலாப்பூர் கழக படிப்பகத்தில் துப்புரவுத் தொழிலாளர் கேக் வெட்டி, அம்பேத்கர் பிறந்த நாளை கொண்டாடினர். இவ்விழாவில் தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்ட தலைவர் வேழ வேந்தன், மாவட்ட செயலாளர் உமாபதி உள்ளிட்ட 40க்கும் மேற்பட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## *சென்னை சுயமரியாதை கல்விக் கழகம் சிறப்பான முயற்சி*

# இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் குறித்து பயிலரங்கம்: பகுதி மக்கள் பேராதரவு





15.4.2017 அன்று மாலை 4 மணியளவில் சென்னை மந்தைவெளி செயின்ட்மேரீஸ் சாலையில் அமைந்துள்ள அப்துல்கலாம் சமுதாய நலக் கூடத்தில் மயிலைப் பகுதி திராவிடர் விடுதலைக் கழகத்தோழர்கள் முயற்சியால் சுயமரியாதைக் கல்விக் கழகம் என்ற ஒரு துணை அமைப்பை உருவாக்கி,10, ப்ளஸ் 2 மற்றும் பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு மேற்படிப்பு மற்றும் அரசு வேலை வாய்ப்பு களுக்கான பயிலரங்கம் நடத்தப்பட்டது. இப்பயிலரங்கத்தில் மாணவ மாணவியர் 70 பேர், அவர்களுடைய பெற்றோர் மற்றும் கழகத் தோழர்கள் என 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பயிலரங்கத்தில் வகுப்புகள் நடத்த ம. வீரபாகு, (வருமான வரித் துறை அதிகாரி, தலைவர், கூட்டுறவு சங்கம்), கோ. குணவதி (தலைவர், வருமானவரி பிற்படுத்தப்பட்டோர் ஊழியர் சங்கம்), கு. தனசேகர் (வருமானவரி ஆய்வாளர்) ஆகியோர் கலந்து கொண்டனர். கழகத் தோழர் ஆ. சிவக்குமார் தலைமை தாங்கினார்.

கோ. குணவதி, மாணவர்களிடையே உள்ள தாழ்வு மனப்பான்மையை உடைத்தெறியும் விதமாக தன்னம்பிக்கை ஊட்டும் கருத்துகளை முன் வைத்தார். “அரசு வேலைக்கு செல்ல இலஞ்சம் கொடுக்க வேண்டுமா?” என்று மாணவர்கள் கேட்ட கேள்விகளுக்கு “அப்படியெல்லாம் இல்லை நாங்கள் யாரும் இலஞ்சம் கொடுக்காமல் தேர்வு எழுதித் தான் வேலைக்குச் சென்றோம்” என்று எடுத்துக் கூறி, எப்படி அரசு வேலைக்கு வந்தார் என்பதையும் விளக்கினார். அதிலும் குறிப்பாக, ‘இரண்டு குழந்தைகள் பெற்றெடுத்தப் பின்தான் அரசு வேலைக்கான தேர்வே எழுதினேன்’ என்று சொல்லி, எல்லா பெண்களும் தடைகளை உடைத்தெறிந்து வரவேண்டும் என்பதையும் மாணவர்களோடு மாணவர்களாக ஒன்றி நின்று விளக்க உரை யாற்றினார்.

ம. வீரபாகு அவர்கள் என்னென்ன அரசு வேலைகள் இருக்கிறது, அஞ்சல் துறை, சிவில் சர்வீஸ், வங்கித் துறை, இரயில்வே, காப்பீட்டுத் துறை, வருமான வரித் துறை, பாதுகாப்புத் துறை என அரசு வேலை வாய்ப்புகள் உள்ள அனைத்து துறை சம்பந்தமாகவும், அதற்கான வயது வரம்பு, தேர்வு முறைகளை உரையாகவும், திரைக் காட்சி வடிவமாக வும் விளக்கி இரண்டரை மணி நேரம் வகுப் பெடுத்தார்.

வீரபாகு தம்பி வெங்கடேஷ் வருமான வரித்துறை அதிகாரியாக உள்ளார். அவர் இராணுவத்தில் உள்ள வேலை வாய்ப்புகளை விரிவாக விளக்கினார். வெங்கடேஷ் 35 வயது வரை இராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். ஓய்வு பெற்ற பின் வருமான வரித் துறையில் தேர்வு எழுதி இன்று வருமானவரித் துறை அதிகாரியாக உள்ளார். வகுப்புகள் முடிந்து கேள்வி நேரம் நடந்தது. அனைத்து கேள்விகளுக்கும் வீரபாகு, குணவதி பதில் அளித்தனர். தனது மகளோடு, துணையாக இந்த பயிற்சிக்கு வந்திருந்த 40 வயது பெண், நான் என் மகளை இந்த வகுப்புக்கு அழைத்து வந்தேன். ஆனால் நீங்கள் என்னையும் அரசு வேலைக்குச் செல்லும் ஆசையை தூண்டி விட்டுள்ளீர்கள். நான் தேர்வு எழுதலாமா? அரசு வேலைக்குச் செல்லலாமா? நான் பட்டப்படிப்பு படித்துள்ளேன் என்று கேட்க, அதற்கு வீரபாகு, தாராளமாக செல்லலாம். தேர்வு எழுதுங்கள். தேர்வில் நாம் பிளஸ் 2 வரை படித்ததிலிருந்துதான் அதிகமாக கேட்பார்கள். தினசரி பத்திரிகை படியுங்கள். அதுவும் பரபரப்பு செய்திகளை விட்டுவிட்டு மற்றவற்றையெல்லாம் படியுங்கள் என்று கூறி, எத்தகைய செய்திகளில் கவனம் செலுத்த வேண்டும் என்பதை பட்டிய லிட்டார்.

பெரும்பான்மை மாணவர்களின் அய்யமாக இருந்தது, ஆங்கிலம் பற்றித்தான். அது ஒரு தடையே இல்லை. தமிழிலேயே எழுதலாம். என்றும் நீங்கள் எல்லாம் எங்களைப் போன்று எங்கள் துறைக்குள் வரவேண்டும். அதையே நாங்கள் எதிர்பார்க்கிறோம். மத்திய அரசு வேலைகளில் தமிழர்கள் குறைந்து வரு கிறார்கள் என்று தன்னம்பிக்கைகளை ஊட்டினார்.

இந்த பயிலரங்கத்திற்காக 5 ஆயிரம் துண்டறிக்கைகளை அச்சேற்றி, மாணவர்கள், பொது மக்கள், பயிற்சி மய்யங்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் வசிக்கும் குடிசைப் பகுதிகளில் வாழும் இளைஞர் களுக்கு விநியோகிக்கப்பட்டன. பயிலரங்கு குறித்த விழிப்புணர்வு உருவாக்கப்பட்டது. பி.காம். படித்த ஒரு இளைஞர் மிகவும் உற்சாகம் பெற்று, பயிலரங்குக்கு உதவிட முன் வந்தார். அவரே வரவேற்புரையும் ஆற்றினார். அதில் சுயமரியாதை கல்விக் கழகத்தின் நோக்கத்தை உணர்வுபூர்வமாக பாராட்டினார்.

இறுதியாக, நாராயணமூர்த்தி (வருமான வரித் துறை பிற்படுத்தப்பட்ட ஊழியர் சங்கப் பொருளாளர்) நன்றி கூறினார். சுயமரியாதை கல்விக் கழகம் ஏற்பாடு செய்த இந்த பயிலரங்கில் வருமான வரித் துறை பிற்படுத்தப்பட்டோர் சங்கமும் தன்னை இணைத்துக் கொண்டு செயல்பட்டது. வருமானவரி ஆய்வாளர் அன்பு தனசேகர், அறிமுகவுரை ஆற்றினார். இரவு 8 மணி வரை பயிலரங்கம் நடந்தது. கழகத் தோழர்களின் இந்த ஆக்கப்பூர்வ செயல்பாட்டுக்கு பொது மக்கள் பாராட்டுகளைத் தெரிவித்தனர்.

**– நமது செய்தியாளர்**

# கவுசல்யா — திவ்யாவின் உருக்கமான சந்திப்பு



**இளவரசன் தாயாருடன் கவுசல்யா**

தர்மபுரியில் திவ்யா என்ற பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த பெண், இளவரசன் என்ற தலித் இளைஞரை காதலித்து திருமணம் செய்து, இளவரசனின் குடும்பத்தோடு வாழ்ந்தபோது, ஜாதி வெறி சக்திகள் கலவரம் செய்து கட்டாயப்படுத்தி இந்த இணையர்களைப் பிரித்தனர். இறுதியில் தலித் இளைஞர் இளவரசன், இரயில் தண்டவாளம் அருகே பிணமாகக் கிடந்தார். திவ்யா என்ற பிற்படுத்தப்பட்ட சமுதாயப் பெண், வாழ்க்கைத் துணைவரை பறி கொடுத்துவிட்டு கடும் மன அழுத்தத்தில் சமுக - ஜாதியப் பிடிக்குள் சிக்கித் தவிக்கிறார்.

இதே கொடுமைதான் உடுமலை சவுசல்யா என்ற பொறியியல் பட்டத்தாரிப் பெண்ணுக்கும் நிகழ்ந்தது. தன்னுடன் படித்த சங்கர் என்ற தலித் பொறியாளர் மாணவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார் என்பதால், சங்கரை உடுமலைப்பேட்டையில் கவுசல்யா கண் முன்பே வெட்டி சாய்த்தார்கள். கவுசல்யா என்ற பிற்படுத்தப்பட்ட சமூகத்துப் பெண்ணின் பெற்றோர்களே இந்தக் கொலையை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு இப்போது சிறையில் இருக்கிறார்கள். ஜாதி வெறி பிடித்த தனது பெற்றோர்களை உதறிவிட்டு, கணவரின் தலித் குடும்பத்திலேயே தன்னை இணைத்துக் கொண்டுவிட்டார் கவுசல்யா. மீள முடியாத மன அழுத்தத்தில் உறைந்து நின்ற கவுசல்யா, அதிலிருந்து மீண்டு, ஜாதி வெறிக்கு எதிராகவும், பெண்ணுரிமைக்கும் குரல் கொடுத்து வருகிறார். உதகை வெலிங்டனில் உள்ள இராணுவ பயிற்சி மய்யத்தில் தற்காலிக வேலையிலும் சேர்ந்திருக்கிறார். மேட்டூரில் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் கடந்த பிப்ரவரியில் நடத்திய ‘காதலர் நாள்’ விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுப் பேசினார்.

கடந்த ஏப்ரல் 14ஆம் நாள் அம்பேத்கர் பிறந்த நாளில் கவுசல்யா, தர்மபுரியில் திவ்யாவின் வீடு தேடிச் சென்று அவரைச் சந்தித்துப் பேசியுள்ளார். ஜாதி ஒழிப்புப் போராளியின் பிறந்த நாளில் ஜாதி வெறிக்கு தங்களது அன்புத் துணைவர்களை இழந்த திவ்யா-கவுசல்யாவின் சந்திப்பு மிகவும் கவனத்தைப் பெற்றிருக்கிறது. திராவிடர் விடுதலைக் கழகத்தில் முனைப்பாக

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776




## இந்து மத வேதங்களே மாட்டிறைச்சியை அனுமதிக்கின்றன

“பசு, கன்று, குதிரை மற்றும் எருமையை உண்ணுவது இந்திரனின் வழக்கம்” என்றும் (6:17:1) “பெண்ணின் மணவிழாவில் காளையும், பசுவும் வெட்டப்படுகின்றன” என்றும் குறிப்பிடுகிறது ரிக் வேதம்.

“மாமிசம் உண்பது பாவமில்லை; ஏனெனில் உண்பது உண்ணப்படுவது என இரண்டுமே பிரம்மனால் படைக்கப்பட்டிருக்கின்றன” என்றும், “மதச் சடங்குகளை முறையாகச் செய்யும் ஒருவர், மாமிசத்தை உண்ணவில்லை யெனில், இறப்பிற்குப் பின்னர், தனது இருபத்தி ஒன்றாவது மறு பிறவியில் பலி விலங்காகப் பிறக்க நேரிடும்” என்றும் மனுதர்மம் கூறுகிறது.

## பார்ப்பனர் திருமணங்களில் மாட்டிறைச்சி

திருமணத்துக்கு முதல் நாள் “மதுவர்க்கம்” என்னும் மாப்பிள்ளை அழைப்பு நிகழ்ச்சியின் போது ஒருவன் கூவி வேண்டுகிறான். அவன் இப்படி கூவுவதற்கு காரணம் என்ன? அவர்கள் எதை வெட்டுகிறார்கள்? “விவாஹே கௌஹ... க்ருஹே கௌஹ... திருமணம் நடக்கும் வீட்டில் மாட்டைத் தான் வெட்டுகிறார்கள் - தாத்தாச்சாரி (நூல்: இந்துமதம் எங்கே செல்கிறது?)

## மாட்டுக்கறி சாப்பிடச் சொல்லும் விவேகானந்தர்

“உடலை வருத்தி உழைக்கும் மக்கள் மாட்டுக் கறியை சாப்பிட அனுமதிக்க வேண்டும். அதே நேரத்தில் பக்தர்களாக வாழ விரும்புவோர் மாட்டுக்கறி சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.” (விவேகானந்தர் உரை தொகுப்பு- தொகுதி 4)

“ஒரு காலத்தில் ‘பிராமணர்கள்’ மாட்டுக் கறி சாப்பிட்டார்கள். ‘சூத்திரர்’களை திருமணம் செய்து கொண்டார்கள். ‘பிராமணர்’களுக்கு சூத்திரர்கள் மாட்டுக் கறி உணவை சமைத்தார்கள்.” (விவேகானந்தர் உரை தொகுப்பு- தொகுதி 9)

“நான் சொல்வதைக் கேட்டால் உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கும். நமது பழங்கால பழக்க வழக்கத்தின்படி மாட்டுக் கறியை சாப்பிடாதவன் நல்ல இந்து அல்ல.” (He is not a good Hindu who does not eat beef) - தொகுதி-3- அமெரிக்காவில் கலிபோர்னியாவில் ‘ஷேக்ஸ்பியர் கிளப்’பில் பிப்.2, 1900 அன்று ஆற்றிய உரை) - ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஏப்ரல் 2015

## மாட்டு இறைச்சி ஏற்றுமதியில் உலக அளவில் இந்தியா முதல் இடம்

காங்கிரஸ் கட்சி இந்திய நாட்டை ஆண்ட வரை மாட்டு இறைச்சியில் இந்தியா உலக அளவில் இரண்டாம் இடத்தில் இருந்தது. பசுக்களைக் காப்பாற்று வதாகச் சொல்லிக் கொண்டு அப்பாவி மக்களின் உணவு உரிமையைத் தடை செய்யும் மோடி அரசு வந்த பிறகு உலக அளவில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. 2014-2015இல், ஆண்டுக்கு 24 இலட்சம் டன் மாட்டு இறைச்சியை ஏற்றுமதி செய்துள்ளது மோடி அரசு. மாட்டுக் கறி வணிகத்தில் உலகிலேயே முதல் இடம். நமது பண்பாட்டையும் உரிமையையும் பறிப்பதற்கு பசுப் பாதுகாப்பு நாடகம். (‘தி இந்து’, 10.8.2015)

**திராவிடர் விடுதலைக் கழகம், கொளத்தூர், சேலம் மாவட்டம்**

## மாட்டு இறைச்சிக்கு எதிரான பார்ப்பன அரசியலை முறியடிப்போம்! பழந்தமிழர் பண்பாட்டை மீட்டெடுப்போம்!

ஆரிய சமாஜம் என்ற அமைப்பை உண்டாக்கியவர் தயானந்த சரஸ்வதி. மூலசங்கரன் என்ற இந்த குஜராத் பார்ப்பனர் தான் மாட்டு இறைச்சி எதிர்ப்பை ஒரு அரசியலாக்கியவர். 1882இல் கோ ரக்ஷினி சபை என்ற அமைப்பை ஏற்படுத்தி, இஸ்லாமியர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் எதிராக அப்பாவி மக்களைத் திரட்டுவதற்காக பசுப் பாதுகாப்பு என்ற அரசியலைத் தொடங்கினார். 1920க்குப் பிறகு இந்து மகாசபாவும், 1925க்குப் பிறகு ஆர்.எஸ்.எஸ்.சும் இந்தியாவின் அடித்தட்டு மக்களின் பண்பாடாகவும், அத்தியாவசியமான உணவாகவும் இருந்த மாட்டிறைச்சி உணவை எதிர்த்த மதவாத அரசியலை நடத்தி வருகின்றனர்.

இந்து மத வேதங்களோ, சாஸ்திரங்களோ, சங்கத் தமிழ் இலக்கியங்களோ, பழந்தமிழர் பண்பாடோ மாட்டு இறைச்சியைத் தடுக்கவே இல்லை. வரவேற்கவே செய்துள்ளன. தமிழர்களின் பண்பாட்டில் முக்கிய அடையாளம் மாட்டிறைச்சி தான். ஏறு தழுவலில் தமிழர்களின் உரிமையைக் காக்க வேண்டும் என்று களம் கண்ட தமிழர்களே! நமது தொன்மை மிக்க பண்பாட்டு அடையாளமான மாட்டு இறைச்சி உணவு என்ற உரிமையை மீட்கவும் களம் காண்போம் என அழைக்கிறது - திராவிடர் விடுதலைக் கழகம்

*(3ஆம் பக்கத் தொடர்ச்சி)*

*களப்பணியாற்றி வரும் பொறியாளர் இரண்யா, கவுசல்யாவுடன் இந்த சந்திப்பில் உடன் சென்றுள்ளார்.*

*கவுசல்யா, தோழர் என்ற சொல்லையே பயன்படுத்தி வருகிறார். இந்த சந்திப்புக் குறித்து கவுசல்யா தனது முகநூல் பதிவில், ‘‘தோழர் திவ்யாவை அவரது இல்லத்தில் சந்தித்தேன். கணவரிடமிருந்து தன்னைப் பிரித்த கொடூரமான ஜாதிவெறியை துணிவுடன் எதிர்த்து நின்றவர் திவ்யா. ஆனாலும் வாய்விட்டுப் பேசவே முடியாத துயரத்தில் ஆழ்ந்துள்ளார். தர்மபுரியில் ஜாதி ஆணவக் கொலைகளுக்கு எதிரான ஒரு நிகழ்வில் நான் பங்கேற்கச் சென்றபோது, அவரது இல்லம் சென்று சந்தித்தேன். அப்போது திவ்யாவின் தாயாரும் உடனிருந்தார். திவ்யா கல்லூரியில் படித்து வருகிறார். வீடு, படிப்பு என்ற அளவில் வாழ்ந்து வருகிறார். அவரது சமூகம் திவ்யாவின் ஒவ்வொரு நடவடிக்கையையும் கண்காணித்து வருகிது. திவ்யா நெற்றியில் பொட்டு வைத்தால்கூட உறவுக்காரர்கள் கேலி கிண்டல் செய்கிறார்கள். கணவன் மரணத்தைக்கூட மறந்துவிட்டாள் என்கிறார்கள். இந்த வசவு, அவமானங்களுக்கிடையே திவ்யா வாழ்ந்து கொண்டிருக்கிறார்’’ என்று பதிவிட்டிருக்கிறார் கவுசல்யா.*

*கவுசல்யாவின் சந்திப்புக்கே திவ்யாவின் தாயார் அஞ்சியதாகவும், நீண்ட தயக்கத்துக்குப் பிறகு சில நிமிடங்கள் மட்டுமே திவ்யாவுடன் கவுசல்யா உரையாட முடிந்ததாகவும் உடன் சென்ற கழகத் தோழர் இரண்யா தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்.*

*பிறகு, கவுசல்யா, இளவரசனின் வீட்டுக்குச் சென்று அவரது தாயாரை சந்தித்துப் பேசியுள்ளார். மிகவும் உணர்ச்சிபூர்வமான சந்திப்பாக இது நிகழ்ந்திருக்கிறது. சில நாட்களுக்கு முன் இளவரசனின் தாயார் ‘ஜூ.வி.’ இதழுக்கு அளித்த பேட்டியில், ‘‘திவ்யா திருமணத்துக்குப் பிறகு எங்கள் வீட்டில்தான் இருந்தது. இப்போது ஒவ்வொரு நாளும் எங்கள் வீட்டின் வழியாகவே கல்லூரிக்கு ஸ்கூட்டரில் போவதை நாங்கள் பார்க்கிறோம். ஆனால் எங்கள் வீட்டை கடக்கும்போது, ஸ்கூட்டர் வேகமாகக் கடந்து விடுகிறது. இந்த நிலையில், நான் உடுமலை கவுசல்யாவை நினைத்துப் பெருமைப்படுகிறேன். எனது மகன் இளவரசன் செய்த ‘பாவம்’ தாழ்த்தப்பட்ட ஒருத்தியின் வயிற்றில் வந்து பிறந்ததுதான்’’ என்று உருக்கமாகக் கூறியிருந்தார். இந்த பேட்டியைத் தொடர்ந்து கவுசல்யா, இளவரசனின் தாயார் சந்திப்பு நடந்தது.*

*கவுசல்யா, தனது கணவர் சங்கர் விருப்பப்படி அவரது குமாரலிங்கம் கிராமத்தில் சொந்த வீடு ஒன்றைக் கட்டி வருகிறார். சங்கரின் இரண்டு உடன் பிறந்தவர்களுக்கு கல்விக்கான உதவிகளை செய்து வருகிறார். சங்கர் குடும்பத்தையே தனது குடும்பமாக ஏற்றுக் கொண்டுவிட்டார். கவுசல்யாவின் ஜாதிவெறி பெற்றோர்கள் சிறையில் இருக்கிறார்கள். தனது பெற்றோர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் கவுசல்யா உறுதியாக இருக்கிறார். தனது கணவர் கொல்லப்பட்டபோது அதைத் தடுக்கச் சென்ற கவுசல்யாவையும் வெட்டினார்கள். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அந்த நிலையிலும் தனது பெற்றோர்களையும் உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று கூறினார் கவுசல்யா.*

*வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட தலித் மக்களின் உரிமைகளுக்காகப் போராடி வரும் ‘எவிடென்சு’ அமைப்பின் இயக்குனர் கதிர், ‘‘கவுசல்யாவின் வழக்கு, அநீதிக்கு எதிரான போராட்டத்தில் ஒரு சிறந்த முன்னுதாரணமாக மாறியிருக்கிறது. இந்த சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு மாத உதவித் தொகையாக ரூ.5000/- தான் கிடைக்கும். கவுசல்யாவுக்கு, ரூ.11,000/- கிடைக்கிறது. குற்றம்சாட்டப்பட்ட அனைவரும் சிறையில்தான் இருக்கிறார்கள். ஒரு வழக்கறிஞர் குழுவையே உருவாக்கி, அரசு இந்த வழக்கை நடத்தி வருகிறது’’ என்று கூறியுள்ளார். தலித் இளைஞர்களை மணம் முடித்து, ஜாதி வெறிக்கு தங்களது கணவர்களை பலிகொடுத்த இந்த இரண்டு பெண்களும் பிற்படுத்தப்பட்ட ஜாதியில் பிறந்தவர்கள். சுய ஜாதி எதிர்ப்பாளர்களாக களத்தில் நிற்கிறார்கள்.*

*இவர்கள் ஜாதி ஒழிப்புக்கான போராளிகள் !*

# திருப்பதி லட்டும் பார்ப்பனியமும்

*நாளொன்றுக்கு இலட்சக்கணக்கில் தயாரிக்கப்படும் ஏழுமலையான் ‘சமையலறையில்’ நுழைந்து லட்டு தயாரிக்கும் உரிமை அய்யங்கார் பார்ப்பனர்களுக்கு மட்டுமே உண்டு என்று பார்ப்பனர்கள் உரிமை கோருகிறார்கள். ஏனைய பார்ப்பனரல்லாத ஜாதி - அவர் தேவஸ்தான தலைவராகவோ அமைச்சராகவோ இருந்தால்கூட, ‘மடப்பள்ளி’க்குள் (சமையலறை) நுழைய முடியாது. அண்மையில் ‘உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாடு ஆணையம்’ என்ற மத்திய அரசு நிறுவனம், சென்னையில் உள்ள உணவு தயாரிப்புக்கான உரிமம் வழங்கும் ஆணையகத்துக்கு ஒரு தாக்கீது அனுப்பியது.*

*திருப்பதி ஏழுமலையான் கோயில் பிரசாதமாகிய ‘லட்டு’ ஒரு உணவுப் பொருள் என்பதால் அது உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வருகிறது. இந்த உணவுப் பொருளை தயாரிக்கும் சமையலறை உணவுப் பாதுகாப்புக்கான விதிகளின் கீழ் செயல்படுகிறதா என்பதை கண்காணிக்க வேண்டியது சட்டப்படியான நடைமுறை. எனவே பொது சமையலறைக்கான உரிமம் பெறப்பட்டுள்ளதா ? உணவுப் பாதுகாப்புக்கான விதிமுறைகள் பின்பற்றப்படுகிறதா என்பதை ஆய்வாளர்கள் மூலம் கண்காணிக்க வேண்டும் என்று தாக்கீது அனுப்பியது. ஆனால், திருப்பதி தேவஸ்தான நிர்வாகம் இந்த சட்டநெறிமுறைகளை ஏற்க முடியாது என்று மறுத்துவிட்டது.*

*‘‘திருப்பதி பிரசாதமான லட்டு, பகவானுக்கு படையல் செய்யப்படும் ‘நைய்வேத்தியம்’ போன்றவற்றை தயாரிக்கும் உரிமை சம்பிரதாயப்படி வைணவத்தில் ஒரு பிரிவினருக்கு (அய்யங்கார் பார்ப்பனர்) மட்டுமே உண்டு. உணவுப் பாதுகாப்புத் துறையின் இந்த உத்தரவு, மத உணர்வுகளை புண் படுத்துவதோடு, காலங்காலமாக பின்பற்றப்பட்டுவரும் மத ஆச்சாரங்களில் குறுக்கிட்டு தடை செய்யும் நோக்கம் கொண்டதாகும். **2006**ஆம் ஆண்டு உணவுப் பாதுகாப்புச் சட்டமோ அதன் விதிகளோ திருப்பதி வேதஸ்தானத்துக்குப் பொருந்தாது. எங்களின் பிரசாதத் தயாரிப்புக்கான பாதுகாப்புகளை நாங்களே செய்து கொள்கிறோம். இதில் அரசு தலையிடும் உரிமை இல்லை’’ என்று திட்டவட்டமாக தேவஸ்தானம் மறுத்து விட்டது.*

*பெங்களூரைச் சார்ந்த சமூக செயற்பாட்டாளர் டி.நரசிம்மமூர்த்தி என்பவர், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ், ‘உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்தல் ஆணையத்துக்கு’ எழுதிக் கேட்டு, இத்தகவல்களைப் பெற்றுள்ளார். ‘இந்து’ **(ஏப் 15)** ஆங்கில நாளேடு இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.*

*கோயில் அர்ச்சனை உரிமை மட்டுமின்றி, பிரசாதம் தயாரிப்பிலும் பார்ப்பனர்களே தங்கள் உரிமையை நிலைநாட்டி, ‘தீண்டாமை’யைப் பின்பற்றி வருகிறார்கள். ஆனால் பக்தர்களுக்கு மொட்டை அடிப்பது, கோயில் துப்புரவு போன்ற வேலைகளை பார்ப்பனர்கள் செய்வது இல்லை. அவற்றைச் செய்வதற்கு ‘பஞ்சமர்கள்’, ‘சூத்திரர்கள்’தான் வேண்டும். இப்போதும் பார்ப்பனர்கள்தான் ‘எஜமானர்கள்’. அவர்களின் மேலாண்மைக்கு கீழ்ப்படிந்து நிற்பதே ‘இந்து’ கலாச்சாரம். பார்ப்பன ஆதிக்கம் எங்கே இருக்கிறது என்று கேட்பவர்கள் இதற்கு என்ன பதிலை கூறுவார்கள் ?*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 20th April 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN